## ஒருவருக்குப் பதிலாக மற்றவர் ஹஜ் செய்தல்

ஒருவர்மீது ஹஜ் செய்வது கடமையாக இருந்து அவர் வயோதிகத்தின் காரணமாகவோ, நோய்வாய்ப்பட்ட காரணத்தினாலோ, தாமாகவே ஹஜ் செய்ய இயலாத நிலையில் அவர் தன்னுடைய செலவில், தன்னுடைய ஹஜ் கடமையை ஏற்கனவே நிறைவேற்றிவிட்ட ஒருவரை தன் சார்பாக ஹஜ் செய்யுமாறு அனுப்பலாம். ஹஜ் செய்துகொண்டிருந்த சமயத்தில் இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒருவரைக் கூறக்கேட்டார்கள், لَبَّيْكَ عَنْ شِبْرِمَةَ (ஷிப்ரிமாவின் சார்பாக لَبَّيْكَ), இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரிடம் கேட்டார்கள், இந்த ஷிப்ரிமா என்பவர் யார்? அதற்கு அவர், என்னுடைய சகோதரர் (என்றோ அல்லது உறவினர்) என்றோ கூறினார். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரிடம் கேட்டார்கள், நீ உன்னுடைய கடமையான ஹஜ்ஜை நிறை வேற்றிவிட்டாயா? அவர் கூறினார், இல்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அப்படியானால் இவ்வாறு சொல்லாதீர், மாறாக, முதலில் உம் சார்பாக ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட்டு அதன்பின் ஷிப்ரிமாவின் சார்பாக ஹஜ்ஜை நிறை வேற்றுங்கள் (அபூ தாவூத், இப்னு மாஜா). மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள் ஒரு மனிதர் மீது அவருடைய ஆயுளில் ஒரு முறை ஹஜ் செய்வதுதான் கடமையாக்கப்பட்டுள்ளது.

www.uzairfalahi.com

### காலஞ்சென்ற ஒருவர்மீது கடமையான ஹஜ்

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஒரு பெண் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து கூறினார், இறைத்தூதர் ﷺ அவர்களே, என்னுடைய தாயார் நேர்ச்சை செய்திருந்தார், ஆனால், ஹஜ் நிறைவேற்றுவதற்கு முன்பாகவே இறந்துவிட்டடார்கள், நான் அவருக்குப் பதிலாக ஹஜ் நிறைவேற்றலாமா? அவர்கள் ﷺ கூறினார்கள், ஆம், அவர் சார்பாக நீங்கள் ஹஜ் செய்துகொள்ளலாம். அவர்கள் மீதான கடன் ஏதும் இருந்திருந்தால், அதனை அடைக்க நீங்கள் முன்வருவீர்களா, அந்தப் பெண் கூறினார், ஆம், இறைத்தூதர் ﷺ அவர்களே, அவர்கள் ﷺ கூறினார்கள், இது அல்லாஹ்வுடைய கடன், அவனுடைய கடன் அடைக்கப்படுவதற்கு அல்லாஹ் அதிகமாகவே உரிமையுள்ளவன் (புக்ஹாரி).

### ஹஜ் கடமையானதற்குப் பின்பு அதனை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்வது எவ்வாறு

ஹஜ் கடமையானதும் அதனை உடனே நிறைவேற்றிவிடவேண்டும், மனிதனுடைய வாழ்க்கையைப்பற்றி எந்த உத்திரவாதமும் கிடையாது. மேலும், தன் வசமுள்ள பணம் எப்போது கைவிட்டுச் சென்றுவிடும்

என்பதும் கூற முடியாது, அல்லது வேறு எந்த ஒரு தடங்கலும் ஏற்பட்டு விடலாம். நிலைமை சாதகமாக இருக்கும்போது, இந்த வசதிகள் ஹஜ் கடமை நிறை வேற்றுவதற்குப் போதுமானவை என்று மனதிற்குப் படும்போது அதற்கான நிய்யத்து செய்துகொள்ளவேண்டும். உரிய கார ணங்கள் இருப்பின் தேவைப்படுமானால் சிறிது காலம் தாமதிப்பது தவறில்லை, ஆனால், அதில் முந்திக்கொள்வது மிகவும் சிறந்தது.

* * *

www.uzairfalahi.com